**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 58/2009**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 22.09.2025 |
| **பெயர்** | **செல்வி @ செல்வநாயகி** |
| **க/பெ** | **பாலகிருஷ்ணன்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.50.a.m**

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பாிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வெளியாட்கள் என்னிடத்திற்கு அத்து மீறி நுழைந்துவிட்டதால் அதனை எதிர்த்து இந்த வழக்கை தொடுத்துள்ளேன். 2ம் வாதி எனது கணவர். 3ம் வாதி எனது தந்தை. 4 முதல் 7 வாதிகள் என்னுடன் பிறந்த சகோதர, சகோதரிகள். இந்த வழக்கை எவ்வளவு விஸ்தீர்ணத்திற்கு தாக்கல் செய்துள்ளனே் என்றால் எனது கணவருடைய 10 செண்ட் நிலத்திற்காகவும் எனது தந்தையின் 2400 சதுர அடி நிலத்திற்காகவும் தாக்கல் செய்துள்ளேன். 10செண்ட் நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 337/பி, அது பட்டா நிலமா என்றால் இல்லை, மேய்கால் புறம்போக்கு.

2. முதலில் வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்தினை கிராமநத்தம் என்று தாக்கல் செய்தேன். பின்பு பிரதிவாதி எதிர் வாதுரையில் அதை மறுத்ததன் மூலம் மேய்கால் புறம்போக்கு என திருத்தியுள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எ–அட்டவணை சொத்து என்னுடையது என்பதை காண்பிக்க எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வா.சா.ஆ 1 தாக்கல் செய்துள்ளேன் அது என்னுடைய கணவர் எனக்கு 2 செண்ட் எழுதி கொடுத்த தான

செட்டில்மெண்ட் பத்திரம்.

3. வா.சா.ஆ 1ல் சர்வே எண் 337/பி–ல் எனக்கு பூர்வீகமாக கிடைக்க பெற்ற 2 செண்ட் என்றே குறிப்பிட்டுள்ளது தவிர, 10 செண்ட்டில் 2 செண்ட் கொடுப்பதாக குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை, 10 செண்டும் என் அனுபவத்தில் தான் உள்ளது. வா.சா.ஆ 1–ல் பக்கம் 6–ல் குறிப்பிட்டுள்ள 4 எல்லை விவரத்தையும் மீதமுள்ள 8 செண்ட் குறித்து எங்கும் குறிப்பிடவில்லை என்றால் அது குறித்து தெரியவில்லை. 4 எல்லைகள் குறிப்பிடும்போது மிகுதி நிலம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை.

4. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–2 மற்றும் வா.சா.ஆ–4 நான் குறிப்பிட்டுள்ளது போல் பி மெமோ அல்ல புறம்போக்கு நிலத்திற்கு அரசாங்கத்திற்கு கட்டப்படும் தண்ட தீர்வு ரசீது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–5 ஆவணம் 2–ம் ஐட்ட சொத்திற்கான பி–மெமோ என்றால் சரிதான். பி அட்டவணை சொத்து எ–அட்டவணை சொத்திற்கு அருகில் இல்லை அதே கிராமத்தில் வேறு இடத்தில் உள்ள சொத்து என்றால் சரியல்ல, எதிரில் தான் உள்ளது.

5. எ அட்டவணை சொத்தை குறித்தவரை 2 செண்ட் மட்டுமே உரிமை என்றும் அதற்காக தான் வா.சா.ஆ–6 முதல் வா.சா.ஆ–14 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீண்ட காலமாக அ–அட்டவணை சொத்தில் நாங்கள் தான் அனுபவத்தில் இருந்து வருகிறோம், மின் இணைப்பு மற்றும் தண்ணீர் வரி போன்றவற்றை நாங்கள் தான் செலுத்தி வருகிறோம். எ அட்டவணை என்னுடைய 2 செண்ட் நிலத்தை தவிர்த்து மீதமுள்ள 5 செண்ட் நிலத்டதிற்கான பி மெமோ முதலாம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 10 செண்ட் நிலம் எனது கணவரான 2–ம் வாதிக்கே சொந்தமானது.

6. 2 செண்ட் நிலத்தினை தவிர்த்து மீதமுள்ள நிலத்திற்கான பி மெமோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் புறம்போக்கு நிலம் என்பதால் அனுபவத்திலே எங்களுக்கு உரிமை உள்ளது. மேற்கூறிய 2 செண்டிற்கு கிழக்கு பக்கமாக முதலாம் பிரதிவாதியே கூரை வீடு கட்டி அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. முதலாம் ஐட்ட சொத்து 2 செண்டிற்கு மட்டுமே நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றும் மீதமுள்ள 5 செண்ட் முதலாம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும் எனவே நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல

என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல. முதலாம் பிரதிவாதியின் பெயரில் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். அவருக்கும் தாவா சொத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை.

**விசாரணை முடியும் நேரம்.12.14.p.m.**